**கல்கமுவ பிரதேச சபை - 2023**

------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்கமுவ பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கல்கமுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 8,927,325 பெறுமதியான கல்கமுவ பழைய பேருந்து நிலையத்தின் வர்த்தக நிலையங்கள் மற்றும் கழிப்பறை முறைமை மற்றும் பிரதான அலுவலகக் கட்டிடம் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி நிதிக்கூற்றுக்கள் 2024 மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் வீதி நொறுக்கும் றோலரின் பெறுமதி ரூபா 4,000,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது. | இறுதி நிதிக்கூற்றுக்கள் மூலம் 2024 ஐ சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | ரூபா 38,000 பெறுமதியான தண்ணீர் மோட்டாரின் பெறுமதி மற்றும் நீர் சுத்திகரிப்பு பிரிவில் உள்ள 33 வகையான பொருட்களின் 149 இருப்புப் பொருட்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதி நிதிக்கூற்றுக்கள் 2024 மூலம் சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் கடைசித் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்படாத 07 வழக்குகள் காணப்பட்டதுடன் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நடவடிக்கைகளுக்காக சபை நிதியிலிருந்து ரூபா 106,900 தொகை செலவிடப்பட்டிருந்தது. | | |

**1.6.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால், ரூபா 25,128,818 கூட்டுமொத்தமான 02 கணக்கீட்டு உருப்படிகள் கணக்காய்வில் திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பின்வருமாறுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் 152 ஆம் பிரிவு | 05 ஆண்டுகளுக்கும் மேலாக வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் நி.பி. 570 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ரூபா 3,443,848 பெறுமதியான 514 வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது | 07 வாகனங்கள் மற்றும் இயந்திரங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் | | | |
| (i) 33 ஆம் ஒழுங்குவிதி | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் வீதங்களை செலுத்தாதவர்களின் பட்டியல் மற்றும் சொத்தை இணைப்பதற்கான இடர் ஆணைச்சீட்டு என்பன மதிப்பீட்டு எழுதுநரால் தயாரிக்கப்பட்டு தலைவரின் கையொப்பத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 61 ஆம் ஒழுங்குவிதி | வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தி பெறப்பட்ட பட்டியலில் உள்ள அனைத்து செயற்திட்டங்களும் செயற்திட்ட வரிகள் பதிவேட்டில் சேர்க்கப்பட வேண்டிய போதிலும் கட்டணம் செலுத்தும் வணிகங்கள் மாத்திரமே பதிவேட்டில் உள்ளடக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. வரி இல்லா செயற்திட்டங்கள் ஆவணங்களில் சேர்க்கப்படாததுடன் இது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | ஒழுங்குவிதியின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) உள்ளூராட்சி சுற்றறிக்கைகள் | | | |
| (i) 2010 யூலை 30 ஆம் திகதிய உள்ளூராட்சித் திணைக்களத்தின் 2010/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1.2 ஆம் பிரிவு | சிரமப்படும் உத்தியோகத்தர்களுக்கு 02 வருடங்களுக்கு ஒரு தடவை பிரதேச இடமாற்ற முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2015/11/02 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | தெரு விளக்குகளின் பதிவேடு நாளதுவரை பேணப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | 2018/07/19 ஆம் திகதிய 2018/elocal government 01 ஆம் இலக்க சுற்றறிக்கை | குடிமக்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கும் ஒன்லைனில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கும் வசதி செய்யப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 11,773,257 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 17,224,730 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப் பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை** |
| | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** |
| வீதவரிகள் | 3316 | 3316 | 2643 | 673 | 4725 | 2961 | 2292 | 668 |
| வாடகைகள் | 12327 | 12327 | 11344 | 983 | 22713 | 10628 | 9629 | 998 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 3359 | 3359 | 3353 | 6 | 2120 | 2141 | 2141 | - |
| ஏனைய வருமானம் | 25139 | 24944 | 13099 | 11845 | 21958 | 27153 | 19076 | 8077 |
| **மொத்தம்** | **44,141** | **43,946** | **30,439** | **13,507** | **51,516** | **42,883** | **33,138** | **9,743** |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதவரி நிலுவை மீதி ரூபா 1,052,285 இருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | நிலுவை மீதியை அறவிடுவதற்கும், உரிமையாளர் அடையாளம் காணப்படாத சொத்துக்களின் உரிமையாளர்களை இனங்காண்பதற்கும், எதிர்காலத்தில் இனங்காணப்படாத வேறுபாட்டைத் தீரப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 வருடங்களுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கடந்த 2015 ஆம் ஆண்டில் பிரதேச சபையினால் வீதவரி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. | -மேற்பபடி- | வீதவரி மதிப்பிடப்பட்டு உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறப்பட வேண்டிய வாடகை நிலுவை மீதி ரூபா 435,921 இருந்தது. | -மேற்படி- | நிலுவை மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 அளவில் மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட வேண்டிய நீதிமன்ற அபராதம் மற்றும் முத்திரைத் தீர்வை முறையே ரூபா 7,070,808 மற்றும் ரூபா 4,774,297 ஆக இருந்தன. | -மேற்படி- | நிலுவை மீதிகளை உடனடியாக அறவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தால் இயற்றப்பட்ட பணிகளை ஆற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 3,893,141 மீண்டெழும் செலவினங்கள் மற்றும் ரூபா 1,435,000 மூலதன செலவினங்கள் என ரூபா 5,328,141 கூட்டுமொத்தம் திடக்கழிவு முகாமைத்துவத்திற்காகச் செலவிடப்பட்டிருந்த போதிலும், குப்பை விற்பனை மூலம் பெறப்பட்ட வருமானம் ரூபா 464,900 ஆகும். | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | உக்கும் மற்றும் உக்காத குப்பைகளை முறையாக முகாமை செய்வதற்கும், வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 24,222,287 ஆகும். | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சபைக்கு பெறப்பட வேண்டிய மீதி உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 08 கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 48,982,744 ஆகும். | -மேற்படி- | செலுத்த வேண்டிய மீதிகள் சரியான முறையில் உடனடியாகத் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) | இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பெறப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 13,461 இருந்தது. | -மேற்படி- | ஊழியர் கடன்கள் முறையாக அறவிடப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 21 வெற்றிடங்களும், 21 மேலதிகங்களும் இருந்தன. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | பதவியணியினர் தேவைப்பாடுகளை அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி அமைய, மாற்று, ஒப்பந்த அல்லது நாளாந்த படி அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 07 ஊழியர்களுக்கு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா 2,500,271 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையால் பேணப்படும் 151 மயானங்களில் 117 மயானங்கள் சபைக்கு சொந்தமாக இருக்கவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | சொத்துக்களை கையகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சபையில் 3645 தெருவிளக்கு கம்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் பௌதீக ரீதியாக இலக்கமிடப்பட்ட தெருவிளக்கு கம்பங்களின் எண்ணிக்கை 20 ஆகும். | -மேற்படி- | அனைத்து தெரு விளக்குகளுக்கும் இலக்கமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஸ்வர்ண ஜெயந்தி நூலகக் காணி, நாஹெட்டிக்குளம் பிரஜாசாலை காணி மற்றும் நிலையான சொத்துக்கள் சரிபார்ப்பின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட 07 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | கணக்கு சீர்செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம், திடக்கழிவு முகாமைத்துவ நிலையத்தில் 109 GI குழாய்கள் பற்றாக்குறையாக இருந்தது. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | குறைபாட்டிற்கான காரணங்களை சரிபார்த்து, மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 7 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானத்திற்கு இடையில் 22 முதல் 237 சதவீதமான வேறுபாடும் 03 செலவின விடயங்களின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிற்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையில் 22 முதல் 40 சதவீதமான வேறுபாடும் இருந்தன. | அவதானிப்புடன் இணங்கப்படுகிறது. | மதிப்பீடுகள் முடிந்தவரை பகுத்தறிவுடன் தயாரிக்கப்பட வேண்டும். |